DEPOSITION OF WITNESS
(Chapter Code of Civil Procedure)
IN THE COURT OF THE DISTRICT MUNSIF BODINAYAKANUR
**O.S.No. 99 /2021**

Deposition of Witness: PW2.

| | | | |
|---|---|---|---|
| Name | நாகமல்லு | Father Name – சிலமலை | |
| Age | 60 | Village – | மேலச்சொக்கநாதபுரம் |
| | | Taluk – | போடிநாயக்கனூர் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 25.02.2026.

**பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை.**

1. நான் மேலச்சொக்கநாதபுரத்தில் குடியிருந்து வருகிறேன் என்றால் சரிதான். வழக்கு விபரங்கள் அனைத்தும் எனக்கு தெரியும் என்றால் சரிதான். வழக்குரை சொத்து எங்குள்ளது என்றால் தோப்புபட்டியில் உள்ளது. எங்கள் ஊருக்கும் தோப்புபட்டிக்கும் எத்தனை கிலோமீட்டர் துாரம் இருக்கும் என்றால் 4 கிலோ மீட்டர் இருக்கும். எனது தந்தைக்கு சிலமலை என்பதை தவிர வேறு பெயர் உள்ளதா என்றால் இல்லை. செனமல்லன் என்பவர் எனது உடன்பிறந்த தம்பி என்றால் சரிதான். 3ம் லக்க சொத்தை யார் யாரிடமிருந்து கிரையம் வாங்கினார் என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. 3ம் லக்க சொத்தின் விஸ்தீரணம் மற்றும் அதன் அளவுகள் தெரியுமா என்றால் தெரியாது. வழக்குரை சொத்துக்கள் அனைத்தும் பிரிக்கப்படாமல் கூட்டு சொத்தாக தான் உள்ளது என்றால் சரிதான். 3ம் லக்க சொத்து என்னுடைய தனித்த அனுபவத்தில் உள்ளதா என்றால் பொதுவாக இருந்த சொத்தை நாங்கள் தனித்தனியாக பிரித்து அனுபவித்து வருகிறோம். 3ம் லக்க சொத்தின் நான்குமால் தெரியுமா என்றால் மேற்கு பக்கம் பார்த்திபன் நிலம் உள்ளது, கிழக்கு பக்கம் சிலமலை மோகன் நிலம் உள்ளது, தெற்கு பக்கம் பிரதிவாதி ராஜா நிலம் உள்ளது, வடக்கு பக்கம் யார் நிலம் என்று எனக்கு தெரியாது. 3ம் லக்க சொத்தின் பட்டா யாருடைய பெயரில் உள்ளது என்றால் என் பெயரிலும், செனமல்லன் பெயரிலும், ஒன்னப்பன் பெயரிலும் உள்ளது. 3ம் லக்க சொத்தின் பட்டாவை இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். 3ம் லக்க சொத்திற்கு மேற்கு பக்கம் களம் உள்ளது என்றால் சரிதான். மேற்படி களத்தை சுற்றியுள்ள விவசாயிகள் மேற்படி களத்தில் தான் அவர்கள் அறுவடை செய்த பொருட்களை போட்டு வைப்பார்கள் என்றால் எங்களிடம்

கேட்டு தான் அங்கு போட்டுவைப்பார்கள். மேற்படி களம் எங்களுக்கு தனித்து பாத்தியப்பட்டது அல்ல என்றால் சரியல்ல. மேற்படி களத்துக்கு அருகில் என்ன உள்ளது என்றால் மேற்கு பக்கம் தென்னை மரங்களும், புளிய மரங்களும், மேலக்கால்மேடும் உள்ளது. மேற்படி புளிய மரங்கள் யார் அனுபவத்தில் உள்ளது என்றால் எங்கள் அனுபவத்தில் உள்ளது. நானும் எனது சகோதரர்களும் பிரதிவாதியின் நிலத்தை கிரையம் வாங்குவதற்காக தான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. 3ம் லக்க சொத்தில் உள்ள மேற்படி களத்தை சுற்றியுள்ள அனைவரும் மேற்படி களத்தை பயன்படுத்தி வருகிறார்கள் என்றால் சரியல்ல, நாங்கள் அனுமதிகொடுப்பவர்கள் மட்டும் பயன்படுத்தி வருகிறார்கள். நாங்கள் கோரியுள்ள பரிகாரம் எங்களுக்கு கிடைக்கதக்கதல்ல என்றும், எங்களுடைய வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

Take down by me in the open Court
and read over to the witness admited
by the witness to be correct.

MOHAMED HASHIM A
Digitally signed by MOHAMED HASHIM A
Date: 2026.02.25 16:46:39 +0530

District Munsif,
Bodinayakanur.